CAMPAIGN | 100

LCIF • EMPOWERING SERVICE™

Campaign 100 திட்டத்தினூடாக பங்களிப்பை வழங்க எதிர்ப்பார்க்கும் முதயோர், அங்கவீனமுற்றோர், பெண்கள், அனாதைகள் மற்றும் ஏனைய இன வேறுபாடுகளால் சமூக மற்றும் பொருளாதார காரணிகளால் பாதிக்கப்பட்ட மற்றும் விசேட தேவைகள் உள்ள அச்சுறுத்தலான மற்றும் நிர்க்கதியாக வாழும் மக்களுக்கான விசேட சேவை வழங்குவது சம்பந்தமாக தகவல் அறிய lcif.org/donate தளத்தை நாடவும்.

Lions Clubs International FOUNDATION

**Lions Clubs International Foundation**
300 W. 22nd St. | Oak Brook, IL 60523-8842 USA
+1.630.203.3836 | **lionsclubs.org/campaign100**

LCIF_C013_EN 6/19
LCI and LCIF are Equal Opportunity Providers




# மாதிரி கழகங்கள்:

## முன்மாதிரிகள் ஊடாக campaign 100 வழிநடத்தல்

## பிரச்சாரத் தலைவரிடமிருந்து.....



சக லயன்களே,

நாம் எமது இரண்டாம் நூற்றாண்டு சேவையில் கால்பதித்துள்ள இத்தருணத்தில் தேவைகளை நாடும் உலகமொன்றைக் காண்பதோடு அதை மாற்ற லயன்ஸ் அங்கத்தவர்கள் தயாராக உள்ளனர். நோய்கள், அனர்த்தங்கள் மற்றும் ஏனைய அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளோர்களை அவற்றிலிருந்து மீட்டெடுக்க ஆறுதல் அளிப்பதோ, இரக்கம் காட்டுவதோ மட்டும் போதாது. அதற்கு நிதியும் தேவை. Campaign 100 வலுவூட்டல் திட்டம் அதற்கு வழிவகுக்கின்றது.

1968 இலிருந்து LCIF அதன் உலகளாவிய வேலைத் திட்டங்களுக்காக US$100 மில்லியனுக்கும் அதிகமான நிதியை வழங்கியுள்ளது. அதற்கு பெருந்தன்மையுடன் நன்கொடை வழங்கிய லயன்ஸ் அங்கத்தவர்களுக்கும் பங்காளிகளுக்கும் நன்றி. யன்ஜஸ் கழகம் லயன்ஸ்கழம் அதன் 50 ஆண்டுப் பூர்த்தியை கொண்டாடியதோடு அடுத்த நூற்றாண்டில் உலகவாழ் மக்களுக்கு சேவை செய்வதற்கான வளங்கள் லயன்ஸ் வசம் உள்ளது என்பதை உறுதி செய்யவே Campaign 100 திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

LCIF இன் வரலாற்றில் மிகவும் இலட்சியமிக்க பரந்த மூலதனத் திட்டம் என்ற ரீதியில் Campaign 100 திட்டத்தினூடாக US$ 300 மில்லியனைத் திரட்ட முற்படுகின்றது. எனவே லயன்களால் நுற்றுக்கணக்கான மிலியன் மக்களுக்கு பின்வரும் துறைகளில் சேவையாற்ற முடியும்.

- பார்வை, இளையோர், அனர்த்த நிவாரணம் மற்றும் மனிதநேய முயற்சிகளில் எமது சேவையின் தாக்கத்தை அதிகரித்தல்.
- நீரிழிவு நோய்க்கு எதிரான போராட்டம்.
- குழந்தைப் பருவ புற்றுநோய், பசி மற்றும் சுற்றுச் சூழல் சம்பந்தமாக எமது உலகளாவியக் காரணிகளை விரிவாக்குதல்.

எமது மூன்றாண்டு கால பிரசாரச் செயற்பாட்டின் ஒருவருடம் ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. நாம் எமது நிதிசேகரிப்பு வேகத்தை அதிகரிக்க மாதிரிக்கழகங்களைத் தூண்டுகிறோம். அது ஏனைய லயன்களையும் LCIF இன் Campaign 100 திட்டத்தையும் ஊக்குவிக்கும். கடந்த கால எமது LCIF பிரசார முயற்சிகளால் 40 வீதத்திற்கும் அதிகமான நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. நாம் இக்கவர்ச்சிமிக்க இலக்கையடைய ஒன்றிணைவோம்.

ஏற்கனவே இந்த Campaign 100 திட்டத்தின் மாதிரிக் கழகங்களாக மாறிய கழகங்களுக்கு என் இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாதிரிக் கழகங்களாக மாறும் சவாலை எதிர்கொள்ளும் ஏனையவர்களுக்குஉங்கள் தலைமைத்துவம் ஊக்கமளிப்பதோடு அது அண்மித்த மற்றும் தொலைவிலுள்ள சமூகங்களுக்குப் பிரகாசமான ஆரோக்கியமிக்க எதிர்காலத்தை உருவாக்க உதவும்.

உண்மையுள்ள,



ஜிட்சுஹிரு யமாடா
முன்னாள் சர்வதேச தலைவர்
Campaign 100 திட்டத்தின் பிரதானி

# உங்களுக்கு நன்றி !

அதிகமானோர் கூறுவது உலகில் தேவைகள் அதிகமென்றே, உலகம் பூராகவுமுள்ள 1.4 மில்லியனுக்கும் அதிகமான லயன்ஸ் அங்கத்தவர்கள் கூறுவது“நாம் சேவை செய்கிறோம்”என்றே.

அனைத்து லயன்ஸ் அங்கத்தவரும் அச்சமின்றி புதிய பணிகள் நிறைந்த யுகத்தை நோக்கி பயணிக்கின்றனர். அந்தப் பணிகள் நிறைந்த யுகம் வெற்றியளிப்பது எமது செயற்பாடு மற்றும் வழங்குதல் எனும் இரு விடயங்களைப் பூர்த்தி செய்வதனூடாக மட்டுமே, லயனான உங்களுக்கு நன்றி.

எல்லைகளை மறந்து செயற்பட்டு campaign 100 மாதிரிக் கழகமாக சவால்களை வெற்றி பெற்று புதிய வழியில் சேவையாற்றும் லயன்களே எம் மனமார்ந்த நன்றி உங்களுக்கே. நாம் அனைவரும் எமது நூற்றாண்டு பூர்த்தி செயற்றிட்டத்தின் நோக்கங்களை அடைவோம். எமது உலகிற்கு எப்போதும் சேவையாற்றுவோம்.



## மாதிரிக் கழக அங்கீகாரம்

மாதிரிக் கழகமாவதன் மூலம் பல அனுகூலங்கள் கிடைக்கின்றன. உங்கள் கழகம் ஒரு மாதிரிக் கழகமானதும் அதற்கு விரைவில் சிறப்பு அந்தஸ்து கிடைக்கும். அத்தோடு இவ்வங்கீகாரம் 3 கட்டங்களின் கீழ் இடம்பெறும்.

| குறைந்தபட்ச தனி நபர் அங்கத்துவ சராசரி (USS) | அங்கீகாரம் |
| --- | --- |
| மாதிரிகழகம் - $500 | பெனர் பெச் மற்றும் எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம் |
| தொலை நோக்குடைய மாதிரிக் கழகம் - $750 | தொலை நோக்குடைய ஊதா பெனர் செவ்ரன்,எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |
| 200% மாதிரிக் கழகம் - $1,000 | 200% வெள்ளி பெனர் செவ்ரன் எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |
| 300% மாதிரிக் கழகம் - $1,500 | 300% வெள்ளி பெனர் செவ்ரன் எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |
| 400% மாதிரிக் கழகம் - $2,000 | 400% தங்க பெனர் செவ்ரன், எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம் |
| 500% மாதிரிக் கழகம் - $2,500 | 500% தங்க பெனர் செவ்ரன், எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |
| 600% மாதிரிக் கழகம் - $3,000 | 600% தங்க பெனர் செவ்ரன், எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |
| பிரீமியர் மாதிரிக் கழகம் - $3500+ | பிரிமியர் தங்க பெனர் செவ்ரன், எழுத்துமூல மற்றும் பொது அங்கீகாரம |

எழுத்துமூல அங்கீகாரத்தில் செய்திப் பத்திரிகைகள், வலயத்தளங்கள் மற்றும் வேறு வாய்ப்புகள் உள்ளடங்கும். பொது அங்கீகாரத்தின் போது சுருள் திரைகள் ஊடாக பிரதேசரீதியான மற்றும் வேறு மாநாடுகளில் காட்சிப்படுத்துதல் உள்ளடங்கும்.

விசேடமாக நிர்மானிக்கப்பட்ட Campaign 100 மாதிரிக் கழக நினைவுச் சின்னம் நிகழ்ச்சியின் இறுதியில் வழங்கப்படும்.

## 3 கட்டத்தில் கிடைக்கும் அங்கீகாரம்

மாதிரிக் கழகமாகத் தலைமைத்துவம் வகிக்க அர்ப்பணித்து உங்கள் கழகத்துக்கு மூன்று கட்டத்திலான செயற்பாட்டைப் பூர்த்தி செய்து விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

| | | |
| --- | --- | --- |
| பங்களிப்புக்கான அர்ப்பணித்தல் | தனிநபர் அங்கத்துவ சராசரி இலக்கை அடைதல் | அனைத்து உறுதி மொழிகளையும் அர்ப்பணிப்புக்களையும் நிறைவேற்றுதல் |




## மாதிரிகழகம் - Campaign 100 வெற்றிக்கு முக்கியமானவை

Reching Campaign 100இன் 300 மில்லியன் அமெரிக்க டொலர் மூலதன நிதியை திரட்டுவதற்காக உலகளாவிய அனைத்து லயன்ஸ் கழகங்கள் மற்றும் லயன்ஸ்களினதும் பங்களிப்பு அவசியமாகும். அதற்காக மாதிரிக் கழகங்கள் சிறந்த வழிகாட்டல்களை வழங்குகின்றது.

நிதி திரட்டுவதற்காக பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்படும்.

- ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் தனித்தனியாக நன்கொடை பெறல் அல்லது அதற்கான வாக்குறுதியைப் பெறல்.
- Reching Campaign 100க்காக நிதி திரட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளல்.
- கழக நிதியிலிருந்து LCIF க்கு நன்கொடை வழங்குதல்.
- சமூக அங்கத்தவர்களிடம் நன்கொடை கோரல்.

2022ஆம் ஆண்டு ஜுன் 30ஆகும் போது தனிநபர் அங்கத்துவத்தின் சாதாரண பெறுமதியைக் குறைந்தபட்சம் 500 அமெரிக்க டொலர் வரையிலாவது உயர்த்த முயற்கிகள் எடுக்கப்படுகின்றது. இவ்வங்கத்துவ சாதாரண பெறுமதியைக் கணிக்கும்போது 2007ஆம் ஆண்டு ஜுலை 1இலிருந்து கணிப்பதால் ஏற்கனவே உங்கள் கழகம் அந்த இலக்கை அடையும் வழியில் பிரவேசித்துள்ளது. மற்றைய கழகங்களும் இவ்வாறு இணைவதற்கு ஊக்குவிக்கும் வகையில் செயற்படல்.

மாதிரிக் கழகமாக மாறுவதற்கு ஏனைய கழகங்களைத் தூண்டுகின்றது.

## முன்மாதிரியான வழிகாட்டல்

மாதிரிக்கழகங்கள் முக்கியமான காரணங்களுக்காக முக்கியமான பணிகளில் ஈடுபடுவதனூடாக ஏனைய கழகங்களை Reaching campaign 100இல் பங்குபற்றச் செய்ய முன்மாதிரியான வழிகாட்டலை வழங்குகின்றது.

## மாதிரிகழகங்களாவதன் நன்மைகள்

தற்போதுள்ள உங்கள் கழகத்தை அடுத்த மாதிரிக் கழகமாக மாற்ற உதவி, இந்த நன்மைகளை உங்கள் கழகத்திற்குப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- மாதிரிக் கழகங்கள் campaign 100இற்கு அனுசரணை வழங்குவதோடு உங்கள் சமூகத்தினுள்ளும் உலகம் பூராகவும் லயன்ஸ் சேவையை வலுவூட்டும்.
- மாதிரிக் கழகங்கள் உள்ளூர் சமூகத்தை அறிவுறுத்துவதோடு சர்வதேச லயன்ஸ் கழகமன்றத்திற்கு ஒத்துழைப்பும் வழங்கும்.
- பொதுவிடயங்களுக்காக ஒன்றிணைந்து ஒத்துழைப்பதால் மாதிரிக் கழக உறுப்பினர்கள் மிகவும் நெருக்கமாக அவர்களின் ஒத்துழைப்பையும், நிதிதிரட்டும் திறமையையும் மேம்படுத்துகின்றனர்.
- மாதிரி கழகங்களுக்காக விசேட பதவிகளும் அங்கீகாரமும் கிடைக்கின்றன.

## மாதிரிக் கழகங்களுக்கான ஆதரவு

நிதியத்தை அதிகரிக்கும் சவாலான கழகத்தின் தனிநபர் அங்கத்துவ சராசரியை (குறைந்தபட்சம் 500 அமெரிக்க டொலராக இருத்தல் வேண்டும்) அடைவதைத் தீர்மானிப்பதற்காக உங்கள் அங்கத்தவர்களைச் சந்தித்ததும் சுருக்கமான தகவல்களுடன் மாதிரி கழகங்களுக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கவும்.

சமூக தனிநபர் அங்கத்துவசராசரி 500 டொலர் இலக்காகும் போது கழகதிறைசேரி, நிதிதிரட்டுவதற்கான செயற்பாடு,சமூக அங்கத்தவர்கள் மற்றும் தனிப்பட்ட தொடர்புகள் ஊடாக ஒன்றிணைந்த நன்கொடைகள் பல்வேறு வழிகளிலிருந்து கிடைக்கக்கூடும். அவற்றையும் கழகத்தின் தனிநபர் அங்கத்துவ சராசரியாக கணிக்கமுடியும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

உங்கள் இலக்குகளை அடைவதற்காக உங்களுக்கு உதவுவதற்காகவும் campaign 100ஐ வெற்றிபெறச் செய்யவும் மாதிரிக் கழகக் கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள், மாதிரிக் கழகங்களுக்கான அர்ப்பணிப்பு விண்ணப்பப்படிவம் மற்றும் முன்வைப்புகள் உள்ளன. இவ்வனைத்தையும் விட உங்கள் கழகம் மற்றும் மாவட்ட இணைப்பாளர் உங்கள் மாதிரிக் கழகத்திற்குத் தலைமைத்துவம் வகிக்கத் தேவையான மூலாதரங்களைப் பயன்மிக்கதாகப் பயன்படுத்த உதவுவார்.

# உங்கள் 100 டொலர் செயற்பாட்டில் உள்ளது

